# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1601/13 - 2009 මැයි 11 වැනි සඳුදා - 2009.05.11

*1601/13 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 21/78.

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2009, பெப்புருவரி 10.

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம், 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கமத்தொழில் பட்டப்பின்படிப்பு நிறுவக (திருத்தம்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதிய 68/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் (140 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம் ஒன்றாகக் கருதப்பட்டதும்) காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டு, 2001, செத்தெம்பர் 24 ஆந் திகதிய 1203/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான, 1979 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கமத்தொழில் பட்டப்பின்படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டம் அதன் 13 ஆம் பந்தியில் அப்பந்திகள் (அ) தொடக்கம் (ஓ) வரையான உட்பந்திகளை நீக்கம் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

“(அ) கமத்தொழில்சார் உயிரியல்
(ஆ) கமத்தொழில்சார் பொறியியல்
(இ) கமத்தொழில்சார் விசாலிப்பு
(ஈ) விலங்குசார் அறிவியல்
(உ) உயிரியற் புள்ளி விவரங்கள்
(ஊ) கமத்தொழில்சார் பொருளியல்
(எ) பயிர்சார் அறிவியல்
(ஏ) உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பவியல்
(ஐ) தாவரப் பாதுகாப்பு
(ஒ) மண்வள அறிவியல்
(ஓ) தொழில் நிர்வாகம்.”.

5- 519